# பத்துப்பாட்டில் உள்ள குறிஞ்சிப்பாட்டில் கபிலர் குறிப்பிட்ட 99 மலர்களின் மரபு சார் மருத்துவப் பயன்பாடுகள்


தொகுப்பு ஆசிரியர்

**ரவி, சி.**

அறிவும் அன்புமே சிவம்

விலங்கியல் துறை

**தியாகராசர் கல்லூரி**

(தன்னாட்சி)

தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் (NAAC)

மறுமதிப்பேற்றில் 'அ' தகுதி பெற்றது

மதுரை - 625 009



செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் (CICT), சென்னை

நிதி நல்கையுடன் 24.02.2016 அன்று நடைபெற்ற


## கருத்தரங்க கட்டுரைத் தொகுப்பு




Scanned with CamScanner

March 2016

Copyright © Thiagarajar College, Madurai

ரவி, சி. 2016. பத்துப்பாட்டில் உள்ள குறிஞ்சிப் பாட்டில் கபிலர் குறிப்பிட்ட 99 மலர்களின் மரபு சார் மருத்துவப் பயன்பாடுகள் - 24.02.2016 அன்று தியாகராசர் கல்லூரியில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதி நல்கையுடன் நடைபெற்ற கருத்தரங்க கட்டுரைத் தொகுப்பு.

ISBN:978-93-83209-03-3

**All rights reserved**

No part of this publication may be reproduced or transmitted or utilized in any form by any means, electronic or mechanical, including photocopy, recording, or any information storage and system, without permission in writing from the copyright owners.

## Disclaimer

The respective authors are solely responsible for the contents of the papers compiled in this volume. The publishers or editors do not take any responsibility for the same in any manner. Errors, if any, are purely unintentional and readers are requested to communicate such errors to the editors or publishers to avoid discrepancies in future.

**Published by**

**Thiagarajar College**

139 - 140, Kamarajar Salai

Teppakulam

Madurai 625 009

Tel: 0452-2311875

Email: principaltcarts@gmail.com

**Printed by**

Devan Offset Printers

4/840, Annai Velankanni Nagar

Anna Nagar, Madurai - 625 020

Mobile: 98420 55544

Scanned with CamScanner

| | | |
|---|---|---|
| 17. | குறிஞ்சிப்பாட்டு மலர்களின் மருத்துவப் பயன்பாடு (சிறுபூளை, பாதிரி, குருக்கத்தி, சேடல்)<br>பிரியா, பா. | 43 |
| 18. | குறிஞ்சிப் பாட்டில் கபிலர் குறிப்பிட்ட 99 மலர்களின் மரபு சார் மருத்துவப் பயன்பாடுகள்<br>சகாயமேரி, அ. | 46 |
| 19. | கபிலர் - ஏற்றமிகு இயற்கையியலாளர்<br>சரவணக்குமார், ஆ. | 49 |
| 20. | கபிலரது மலர்களும், மருத்துவமும்<br>செந்தில்குமார், மா. | 52 |
| 21. | கபிலர் கூறிய மலர்களின் மகத்துவத்தை தேடி...<br>பேச்சிதுரை, க. &ரவி, சி. | 54 |
| 22. | தமிழறிவோடு அறிவியலறிவும் ஒருங்கே பெற்ற புலவர் கபிலர்<br>ஷாஜிதா மரியம், ந. | 55 |
| 23. | கபிலரும் இயற்கையும்<br>சொர்ணமாலா, சி. | 56 |
| 24. | கபிலர் காட்டும் இயற்கைப் பின்புலமும் பாடுபொருள் கட்டமைப்பும்<br>கற்பகம், மு. | 59 |
| 25. | கபிலர் ஒரு இயற்கை விரும்பி<br>மாலினி, ரா. | 62 |
| 26. | கபிலர் பாடல்களில் பூவின் பயன்பாடு<br>பரமேஸ்வரன், க. | 63 |
| 27. | மலரும் மருத்துவமும்<br>ஏஞ்சல், இரா. | 65 |
| 28. | தலவிருட்ஷ மலர்களின் மருத்துவ குணங்கள்<br>இலக்கியா, சோ. | 67 |
| 29. | குறிஞ்சிப்பாட்டில் தாவர வகைப்பாடு<br>கமலம், அ. | 70 |
| 30. | குறிஞ்சிப் பாடல்களில் உள்ள மலர்களின் மருத்துவக் குணங்கள்<br>நல்லமுத்து, ரெ. &மனோகரன், ஆ. | 75 |
| 31. | இயற்கை நலம் காட்டும் குறிஞ்சிப்பாட்டு<br>மரகதம், ச.கா. | 78 |
| 32. | கபிலரும் பிற இயற்கைக் கவிகளும்<br>அருண் நாகேந்திரன், ந. | 80 |
| 33. | கபிலர் ஒரு இயற்கை விரும்பி<br>அ. நஜிமா பேகம் | 83 |


Scanned with CamScanner

ரவி, சி. 2016. பத்துப்பாட்டில் உள்ள குறிஞ்சிப் பாட்டில் கபிலர் குறிப்பிட்ட 99 மலர்களின் மருத்துவப் பயன்பாடுகள் - 24.02.2016 அன்று தியாகராசர் கல்லூரியில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதி நல்கையுடன் நடைபெற்ற கருத்தரங்க கட்டுரைத் தொகுப்பு

கபிலர் சங்க கால தலைசிறந்த கவிஞர் மட்டும் அல்லாது மிக பெரிய இயற்கை ஆர்வலர் என்பதை அழகுற எடுத்தியம்பி உள்ளார். தலைவனிடம் தலைவி களவு மணத்தின் போது தம் மனதை பறிகொடுத்து விட்டால் என்பதை தோழியின் வாயிலாக கூறியுள்ளார். தலைவனுக்கு தான் இவ்விடம் வருகிறேன் என்பதை தலைவி உணர்த்த இந்த தொண்ணூற்று ஒன்பது குறிஞ்சி மலர்களை பயன்படுத்தி உள்ளார். அத்தனை இக்கட்டான சூழலிலும் இயற்கை அறிவு மாறாது எழுதி உள்ளார்.

முடிவுரை

"சிந்தனைகளை சிதற விடாது, வளர விட்டு
முயற்சிகளை முடக்கி விடாது, முன்னேற விட்டு
எண்ணங்களை தூங்க விடாது, எழுப்பி விட்டு
துயரங்களை கண்டு துவண்டு விடாது,
புறப்படுவோம், மாணவப் படையே"

அக்காலத்திலுள்ள இலக்கியங்களைக் கற்று வாழ்வை வளப்படுத்துவோம். கபிலர் போன்ற பல ஆய்வாளர்களை அடையலாம். குறிஞ்சி பாட்டில் மட்டும் அல்லாது கபிலர் தம் தமிழ் புலமையை மற்ற சங்க இலக்கியங்களிலும் அழகுற தெளிவுறக் கற்போர் விளங்கும் வண்ணம் எடுத்தியம்பி உள்ளார். இன்னும் நாம் அறியப்படாத பல அற்புதங்கள் ஆதி காலங்களிலே கண்டறியப்பட்டதாக தகவல் உள்ளது. அதனைத் தேடி பாதை அமைப்போம் எம் மாணவர் சமுகமே வெற்றி என்னும் கனியை சுவைப்போம்.

## 23. கபிலரும் இயற்கையும்

சொர்ணமாலா, சி.
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை - 18

சங்க இலக்கியங்கள் கடந்தகால நிகழ்வுகளை எக்காலத்திற்கும் பிரதிபலிக்கும் கண்ணாடிகள். அவற்றுள் பத்துப்பாட்டில் அகப்பொருள் சார்ந்த, மலைப்பின்னணியில் அமைந்த ஒரு காதல் நிகழ்ச்சியைப் பாடும் இலக்கியம் குறிஞ்சிப்பாட்டு. குறிஞ்சித் திணையைப் பாடுவதற்கு உரியவர் என்ற பெருமையுடைய கபிலரால் எழுதப்பட்ட இந்நூல் 261அடிகளைக் கொண்டது. இது தமிழை, அதன் அகப்பொருள் மரபினை ஆரிய மன்னன் பிரகதத்தனுக்கு அறிவிப்பதற்காக இயற்றப்பட்டது என்பர்.குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கை, தலைவன் தலைவி களவொழுக்கம், களவு மணம், செவிலித் தாய்க்குத் தோழி வழி தெரிய வருதல், தலைவி கொண்ட வருத்தம், செவிலித் தாயின் வேதனை, ஆகியவற்றைத் தொகுத்துத் தரப்பட்ட நூல் குறிஞ்சிப்பாட்டு.

குறிஞ்சியும் கபிலரும்:

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகைத் திணைகளுள் குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த இடமும் ஆகும். பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மலர்கின்ற குறிஞ்சி மலர்களின் இருப்பிடம் இம்மலைப்பிரதேசங்கள் என்பதாலும் மலைகளில் மலர்கின்ற மற்ற மலர்களைவிட சிறப்புப்பெற்ற மலர் குறிஞ்சி என்பதாலும் மலைசார்ந்த பகுதி குறிஞ்சி எனப்பட்டது. இக்குறிஞ்சித்திணையை அதன் மலைக்காட்சிகளை, இயற்கை நிகழ்ச்சிகளைக் கற்பனை நயத்துடன் வர்ணிப்பதில் கபிலர்க்கு நிகர் கபிலரே. அதனால்தான் 'கருதும் குறிஞ்சி கபிலன்' எனத் தனிப்பாடல் இவரைப் போற்றியது. இப்போற்றுதல் குறிஞ்சிக் கலிக்காக மட்டுமல்ல; இவரின் ஒட்டுமொத்த குறிஞ்சிப் பாடல்களுக்காகவும்தான்.மலைவாழ் மக்களின் இயற்கை வாழ்வு, மலைகளில் மலர்கின்ற பூக்கள், அங்குக் கிடைக்கும் இயற்கை



Scanned with CamScanner